1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, அங்கே தற்போது இருக்கிற மருத்துவ மனையில் 182 படுக்கைகள் இருக்கின்றன. அதை மாவட்ட மருத்துவ மனையாக முழுமையாக உயர்த்த வேண்டுமென்றால் 400 படுக்கைகளைக் கொண்டதாக உயர்த்த வேண்டும். அங்கே படுக்கை வசதியை உயர்த்துவதற்கு இட வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே சுமார் 35 ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளிடம் கலந்து, மாவட்ட மருத்துவ அலுவலரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதெல்லாம் முடிந்த பிறகு அதை மாவட்ட மருத்துவ மனையாக உயர்த்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. கே. பிச்சாண்டி : பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவ மனைக்கு அருகிலே கால்நடை மருத்துவமனை 3 ஏக்கரில் உள்ளது. அந்தக் கால்நடை மருத்துவ மனையை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அந்த இடத்தை மருத்துவ மனையோடு சேர்த்து புதிதாகக் கட்டிட வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, நான் 35 ஏக்கர் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டேன். ஆனால் 3 ஏக்கர் நிலம் அருகிலே இருப்பதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர்.

*9523—திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை செங்கை - அண்ணா மாவட்ட கடற்கரை அருகில் அமைந்துள்ள பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் விஷத்தன்மை வாய்ந்த கழிவு நீர் கடலில் கலப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே,

[1990 ஆகஸ்ட் 23

(அ) மற்றும் (ஆ) : வட சென்னையில் உள்ள அனைத்து பெரிய தொழிற்சாலைகளும், தனித்தனியே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி உள்ளன. மேற்படி தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முறையாகக் கண்காணித்து வருகிறது. மேலும் மணலி, எண்ணூர் பகுதிகளில் அமைந்துள்ள அதிகமாக மாசுப்படுத்தும் தன்மையை உடைய பல தொழிற்சாலைகளை வாரியம் கண்டறிந்து அவைகளை கண்காணித்து வருகிறது.

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திடீர் விசிட் மூலம் அந்தத் தண்ணீரை எடுத்து, ஆய்வுக்கு அனுப்ப ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; எந்த ஆலையில் அதைப்போல் நடைபெறுகிறது என்று சொன்னால் அதைப் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் புதிய பால் பண்ணை தொடங்கும் திட்டம்.

*8166—திரு. எஸ். ஆர். சிவலிங்கம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டத்திலேயே மற்றொரு புதிய பால் பண்ணை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் சங்கம்.

*3146—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் சங்கத்தில் கூட்டுறவுச் சட்ட விதிகளுக்கு முரணாக

TRUTH ALONE TRIUMPHS